மாலை முரசு
பக்கங்கள் 19 + 03

## ரயில் மோதி ஒருவர் சாவு!

### கிளிநொச்சியில் சோகம்



கிளிநொச்சி, இரணைமடு சந்திக்கு அண்மித்த அறிவியல் நகர் பகுதியில் மோட்டார் 02▶

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | வைகாசி 11 ஞாயிற்றுக்கிழமை 25.05.2024 | அதிர்வு 295

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது
இங்கே CLICK செய்யவும்



# காணி அபகரிப்புக்கு எதிராக நீதிப் போராட்ட நடவடிக்கை

## வெற்றிலைக்கேணியில் ஆரம்பம்

(ந.லோகதயாளன்)

காணி அமைச்சால் வெளியிடப்பட்ட 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணியை அரசுடைமையாக்கும் நடவடிக்கைக்கு எதிராக மக்கள் சார்பில் நீதிப் போராட்டத்துக்கான நடவடிக்கை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தலைமையில் இன்று ஆரம்பமானது.

வடக்கில் அரசுக்குக் காணி அபகரிக்கும் நோக்கத்துடன் 28.05.2025 இல் வெளியிடப்பட்ட வர்த்தமானியை இரத்துச் செய்வது தொடர்பில் பிரதமரும் கைவிரித்தமையால் நில உரிமையாளர்களைச் சந்தித்து சட்ட நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யும் நோக்கில் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனின் ஏற்பாட்டில் நடமாடும் சேவையாக நில அபகரிப்பு பிரதேசத்தில் சட்ட நடவடிக்கைக்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. 03▶




# ஆட்டம் காணும் சஜித் அணி! அசோக சேபாலவும் விலகல்!!

ஐக்கிய மக்கள் சக்தியின் மேலுமொரு தொகுதி அமைப்பாளரும் பதவி விலகியுள்ளார். தலவாக்கலை, லிந்துலை நகர சபையின் முன்னாள் தவிசாளரும் நுவரெலியா தொகுதி இணை அமைப்பாளருமான அசோக சேபாலவே இவ்வாறு அமைப்பாளர் பதவியை துறந்துள்ளார்.

எனினும், ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து அவர் விலகவில்லை. கட்சி ஊடாகப் பயணம் தொடரும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்குள் உள்ளக மோதல் ஏற்பட்டுள்ள 02▶





# வாய்க்காலில் மோ. சைக்கிளுடன் வீழ்ந்து 3 பிள்ளைகளின் தந்தை பரிதாப மரணம்!

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணேசபுரம் பகுதியில் நீர் வடிகால் வாய்க்காலில் மோட்டார் சைக்கிளுடன் வீழ்ந்து ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று சனிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி, 190 ஆம் இலக்கத்தில் வசிக்கும் 36 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பதில் நீதிவான் சிவபால சுப்பிரமணியம் நேரில் சென்று நிலைமையைப் பார்வையிட்டு, மரண விசாரணை மேற்கொள்ள உயிரிழந்தவரின் சடலத்தை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பினார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





## ரயில் மோதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிளில் பயணித்த ஆண் ஒருவர், ரயில் மோதியதில் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மோட்டார் சைக்கிள் ஓட்டுநர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## ஆட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், அக்கட்சியின் நான்கு உறுப்பினர்கள் தொகுதி அமைப்பாளர் பதவியை ஏற்கனவே இராஜினாமா செய்துள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பட்டியல் ஊடாகக் கிடைக்கப் பெற்ற ஆசனங்களுக்குரிய உறுப்பினர் தெரிவை மையப்படுத்தியே பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய ஐக்கிய மக்கள் சக்தியின் காலி தொகுதி அமைப்பாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துலால் பண்டாரிகொட, தொகுதி அமைப்பாளர் பதவியைத் துறந்துள்ளார்.

ஆசனப் பங்கீடு தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினையே இதற்குக் காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஐக்கிய மக்கள் சக்தியின் ரத்தொட்டை தொகுதி அமைப்பாளர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் அலுவிகார, தம்புள்ளை தொகுதி அமைப்பாளர் முன்னாள் மாகாண அமைச்சர் சம்பிக்க விஜேரத்ன ஆகியோரும் பதவி விலகியுள்ளனர்.

அதேவேளை, ஐக்கிய மக்கள் சக்தியின் பண்டாரவளை தொகுதி அமைப்பாளர் பதவியை அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி துறந்துள்ளார்.

எனினும், இவர்களின் பதவி துறப்புக் கடிதத்தை ஏற்றுக்கொள்ளாதிருக்க கட்சித் தலைமை தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.

## காணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கில் 5 ஆயிரத்து 940 ஏக்கர் காணியை அரச காணியாகச் சுவீகரிக்கும் வர்த்தமானி அறிவித்தலை அரசு மீளப் பெற வேண்டும் எனக் கோரி மேற்கொள்ளவுள்ள சட்ட நடவடிக்கையின் முதல் கட்டமாக நில உரிமையாளர்களிடம் உள்ள ஆவணங்களைச் சீர்செய்யும் முகமாக இந்த நடமாடும் சட்ட உதவி இடம்பெறுகின்றது.

இதன் முதல் கட்டமாக வடக்கின் 4 மாவட்டங்களிலும் அறிவிக்கப்பட்ட பிரதேசங்களில் வெற்றிலைக்கேணி நில உரித்தாளர்களுக்குத் தேவையான இலவச சட்ட உதவிகளை வழங்கும் வகையில் அந்த இடத்துக்கே சட்டத் தரணிகள் குழாம் இன்று நேரில் சென்றது.

இதில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் தலைமையில் சுமார் 25 சட்டத்தரணிகள் பங்கேற்றனர்.

வெற்றிலைக்கேணி ரம்போ விளையாட்டுக் கழக மைதானத்தில் இந்தச் சட்ட உதவிகள் மற்றும் ஆலோசனைகள் இடம்பெற்ற வேளை நூற்றுக் கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு சட்ட உதவிகளைப் பெற்றனர்.












# அதிகாரத்துக்காகக் கூட்டுச் சேரும் களவாணிகள்! வெற்றி பெற்ற சகல சபைகளையும் ஆளுவோம்!!

## பிரதி அமைச்சர் பிரதீப் சூளுரை



"தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்ற அனைத்து சபைகளிலும் நாம் நிச்சயம் ஆட்சியமைப்போம்."

– இவ்வாறு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"தேர்தல் காலத்தில் மொட்டுக் கட்சி, தொலைபேசி கட்சி, யானைக் கட்சி என்பன ஒன்றையொன்று விமர்சித்துக்கொண்டன. தற்போது அதிகாரத்தைக் கைப்பற்றி மீண்டும் ஊழலில் ஈடுபடக் கூட்டுச் சேர்கின்றன.

அந்தக் கட்சிகளின் போலி நாடகம், போலி முகத்திரை மக்களுக்குத் தெரியும்.

அப்படிச் சபையை அமைத்தால்கூட ஓரிரு வாரங்களுக்குக் கூட சபையை இவர்களால் நடத்த முடியாது. தவிசாளர், உபதவிசாளர் அதிகாரப் போட்டியிலேயே காலம் சென்றுவிடும்.

எனவே, தேசிய மக்கள் சக்திதான் ஆட்சி அமைக்கும். தவிசாளர்கூட எமது கட்சியைச் சார்ந்தவரே நியமிக்கப்படுவார்." – என்றார்.



# திருகோணமலையில் வாகன விபத்து!

## இருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்

திருகோணமலை, திருஞானசம்பந்தர் வீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருஞானசம்பந்தர் வீதியில் கடல்முக வீதியின் சந்திக்கு அருகே நகரத்தில் இருந்து வெளியேறிய மினிவானும், நகரை நோக்கிப் பயணித்த கொண்டா ரக மோட்டார் சைக்கிளும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குச் சற்று முன்னர் கடல்முக வீதியில் இருந்து திருஞானசம்பந்தர் வீதியை அடைந்த இன்னுமொரு மோட்டார் சைக்கிளுடன் குறித்த மோட்டார் சைக்கிள் மோதிய பின்னர் மினிவானுடன் மோதியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

மினிவானைச் செலுத்தி வந்தவர் சிறுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளதுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரும் படுகாயங்களுக்கு உள்ளாகிய நிலையில் திருகோணமலை வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தில் மலையக மக்கள் பிரச்சினை எடுத்துரைப்பு

அமெரிக்க ராஜாங்கத் திணைக் களத்தால் நடத்தப்படும் கற்கை நெறியில் பங்கு பற்றியுள்ள மலையக அரசியல் அரங்கத்தின் உயர்பீட உறுப்பினர் நா.கிருஷ்ணகுமார் மலையக மக்களின் பிரச்சினைகளை அமெரிக்க ராஜாங்க திணைக்கள கலந்துரையாடலில் முன் வைத்துள்ளார்.

நான் ஒரு தேயிலைத் தோட்டத்தில் தினக்கூலியாக தொழில் புரிந்த குடும்பப் பின்னணியிலிருந்து வந்திருக்கிறேன். இலங்கையில் எங்களுக்கு (மலையக மக்களுக்கு) காணி உரிமை இல்லை, முகவரி இல்லை, அரச சேவைகள் முழுமையாக கிடைக்கவில்லை, கட்டமைக்கப்பட்ட பாரபட்சம், பொருளாதாரப் பிரச்சினை, தினமும் 3 டொலரை விடக் குறைவான தினக்கூலி போன்ற இன்னும் பல பிரச்சினைகளை ஐக்கிய அமெரிக்காவின் அரசதிணைக்களத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் விளக்கியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அறிவார்ந்த அரசியல் செயற்பாட்டை முன்னிறுத்தும் மலையக அரசியல் அரங்கத்தின் சார்பில் அதன் உயர்பீட உறுப்பினர் நா.கிருஷ்ணகுமாருக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம் என்று மலையக அரசியல் அரங்கத் தேசிய அமைப்பாளர் கே.சுரேஷ்குமார் தெரிவித்துள்ளார்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காத்திருக்கும் நெருக்கடி

இலங்கையில் ஏறத்தாழ இரண்டு தசாப்த காலத்துக்குப் பிறகு சிக்குன் குனியா வைரஸ் நோய் பெரிய அளவில் பரவி வருகிறது என எச்சரிக்கை வெளியிடப்பட்டிருக்கின்றது. இலங்கையின் முன்னணி விஞ்ஞானி பேராசிரியர் நீலிகா மாலவிகே இது பற்றிய விவரங்களைவெளிப்படுத்தியிருக்கின்றார்.

‘‘இலங்கையில் 16 ஆண்டுகளுக்குப் பிறகு, கடந்த ஆண்டின் இறுதியில் இருந்து, ஒரு பெரிய அளவிலான சிக்குன் குனியா தொற்று ஏற்பட்டுள்ளது. தற்போது பரவி வரும் சிக்குன்குனியா வைரஸ் திரிவின் முழு மரபணு வரிசை முறையை நாங்கள் ஆராய்ந்தோம். திரிவு விகாரத்தை அடையாளம் காண ஒக்ஸ்போர்ட் நானோபோர் பகுப்பாய்வு முறையைப் பயன்படுத்தினோம். அது தெற்காசியாவில் தற்போது பரவி வரும் திரிவுகளைப் போலவே, இந்தியப் பெருங்கடல் பரம்பரையை ஒத்தது என்பதை நாங்கள் கண்டறிந்தோம்.’’ - எனஅவர்வெளிப்படுத்தியிருக்கின்றார்.

திரிவாகக் கண்டு பிடிக்கப்பட்ட வைரஸின் இந்தப் புதிய பிறழ்வுகளில் சில முன்னர் வகைப்படுத்தப்படாதவை என்பதால் மேலும் நுணுக்கமான ஆய்வுகள் அத்தியாவசியம் என்கிறார் பேராசிரியர் நீலிகா மாலவிகே.

முக்கியமாக இந்தத் திரிவு வைரஸ்கள் நுளம்புகளுக்குள் உடற்தகுதி, வைரஸ் பிரதிபலிப்பு மற்றும் நோயெதிர்ப்புத் தவிர்ப்பை எவ்வாறு பாதிக்கின்ற என்பது குறித்து விரிவாக ஆராய வேண்டியிருப்பதாக அவர் கூறுகின்றார்.

இலங்கையைப் பொறுத்தவரை இது, மக்களைப் பாதிக்கின்ற வெறும் சுகாதாரப் பிரச்சினை மட்டுமல்ல. இலங்கைக்குப் பெரும் பொருளாதார நெருக்கடியை - இக்கட்டை - ஏற்படுத்தக் கூடிய சிக்கலும் கூட. இந்த வைரஸ் பரவல் நாட்டு மக்களைப் பாதித்து, அவர்களை முறித்துப் போடுவதால் ஏற்படக் கூடிய நேரடிப் பாதிப்புகள் ஒரு புறம் என்றால், மறுபுறம் நொடித்துப் போயிருக்கும் நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் தூக்கி நிறுத்துவதற்கு பெரிதும் உதவி வரும் உல்லாசப் பயணத் துறையையும் இந்த வைரஸ் முறித்துப் போடக் கூடிய ஆபத்து ஏற்பட்டிருப்பதாக அபாயச் சங்கு ஊதப்படுகின்றது. ‘ஆனை வரும் பின்னே, மணி ஓசை வரும் முன்னே’ என்று கூறப்படுவது போல இந்த விடயத்தில் உல்லாசப் பயணிகளைப் பாதிக்கும் முதல் அறிவிப்பு வெளியாகி விட்டது.

இலங்கையில் சிக்குன்குனியா பாதிப்பு அதிகரித்து வருவதால், அமெரிக்காவும் பிரிட்டனும் தங்கள் குடிமக்கள் இலங்கைக்கு வருவதைத் தவிர்க்கும் பயண ஆலோசனைகளை வெளியிட்டுள்ளன.

இலங்கையில் பயணிகள் எதிர்கொள்ளும் ‘சுகாதார ஆபத்து’ பட்டியலில் சிக்குன்குனியாவை பிரிட்டனின் வெளியுறவு மற்றும் கொமன்வெல்த் அலுவலகம் சேர்த்துள்ளது.

இந்தியப் பெருங்கடல் பகுதிக்கு பயணிக்கத் திட்டமிடும் மக்கள் சிக்குன்குனியாவுக்கு எதிராக மேம்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அமெரிக்க நோய் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் எச்சரித்தது. அதன் பயண அறிவிப்பின்படி, மொரீஷியஸ், மயோட், ரீயூனியன், சோமாலியா மற்றும் இலங்கையில் சிக்குன்குனியா பரவல் உள்ளது.

சிக்குன்குனியா பரவல் உள்ள பகுதிக்குச் செல்லும் பயணிகளுக்குத் தடுப்பூசி போடவும், கர்ப்பிணிப் பெண்கள் - குறிப்பாக அவர்கள் பிரசவத்திற்கு அருகில் இருந்தால் - பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குப் பயணம் செய்வதை மறுபரிசீலனை செய்யவும் அந்த மையம் அறிவுறுத்தியுள்ளது.

நுளம்புகளால் பரவும் சிக்குன்குனியா, டெங்கு மற்றும் சுவாசத்தால் பரவும் கொவிட் போன்ற தொற்றுகளால் பெரும் நெருக்கடி காத்திருப்பதாகவே தோன்றுகின்றது.






# டி.வி.எஸ். ஹைதர் குழும ஆண்டு விழாவில் கௌரவிக்கப்பட்டார் பாடலாசிரியர் அஸ்மின்

(எம்.எப்.றிபாஸ்)

குவைத்தில் முன்னணி வணிகக் குழுமமாக இயங்கிவரும் டி.வி.எஸ். ஹைதர் குழுமம், தனது 25 ஆவது ஆண்டு விழாவை அண்மையில் கொண்டாடியது.

முத்துப்பேட்டையைச் சேர்ந்த தொழிலதிபர் டாக்டர் . எஸ்.எம். ஹைதர் அலி தலைமையில் செயல்படும் இந்த நிறுவனம், வாடிக்கையாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் விதமாக பலவித நிகழ்வுகளை நடத்தியது.

150 இற்கும் மேற்பட்ட ஊழியர்களை கொண்ட இந்த நிறுவனத்தின் வெள்ளி விழாவில், 1000 வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள் வழங்கப்பட்டன. அதோடு, மூன்று கிலோ தங்கம் ஊழியர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர்களுக்கு வழங்கப்பட்டது.

டாக்டர் . ஹைதர் அலியின் தனிப்பட்ட நெகிழ்ச்சியான சமூகப் பொறுப்பு உணர்வும் நிகழ்வின் முக்கிய அம்சமாக இருந்தது.

விழாவில் இலங்கைச் சேர்ந்த ஊழியர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில், தமிழக அரசின் டில்லி சிறப்புப் பிரதிநிதியான முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.கே.எஸ். விஜயன், தமிழக பொலிஸ் பிரிவின் முன்னாள் தலைமை இயக்குநர் அலெக்சாண்டர், மாவட்ட முன்னாள் அமர்வு நீதிபதி முஹம்மது ஜியாவுதீன், ஊடகவியலாளர் மற்றும் அரசியல் ஆய்வாளர் முக்தார் அஹம்மது, நம் நாட்டின் பிரபல கவிஞரும், தமிழ்ச் சினிமா பாடலாசிரியருமான பொத்துவில் அஸ்மின் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

விழாவின் முக்கிய சிறப்பம்சங்களில் ஒன்றாகக் கவிஞர் பொத்துவில் அஸ்மின் எழுதிய கவிதை அரங்கில் வாசிக்கப்பட்டது. உணர்வூட்டும் அந்தக் கவிதை பெரும் வரவேற்பைப் பெற்றது. இதைத் தொடர்ந்து டாக்டர் ஹைதர் அலி அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

விழாவை டுபாயைச் சேர்ந்த பிரபல தொகுப்பாளினி சாரா மற்றும் சேலம் ஆர்.ஜே. குட்டி பிரகாஸ் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.

இரண்டு நாள் நிகழ்விலும் பிரபல மாயஜால நிபுணர் விக்னேஸின் மாயஜால அரங்கேற்றம் காண்போரை வியக்கவைத்தது.

வணிக வெற்றியுடன் சமூகப் பொறுப்பையும் முன்னெடுத்து வரும் டி.வி.எஸ். ஹைதர் குழுமத்துக்கு உலகமெங்கும் 30 கிளைகளை உள்ளன. ஹைதர் குழுமத்தின் இந்த விழா, தொழில்துறையில் சமூகத்தன்மையை நிரூபிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாக அமைந்துள்ளது.

# இருளில் மூழ்கிய மத்திய முகாம் வீதிகள் மின் விளக்குகளைத் திருத்தக் கோரிக்கை

(ஏ.எச்.எம்.ஹாரீஸ்)

கடந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலின் பின்னர் அதிக சனத்தொகை நடமாட்டமுள்ள வீதிகளில் ஒன்றான மத்திய முகாம் பிரதான வீதிகளில் பொருத்தப்பட்டிருக்கும் மின் விளக்குகள் திடீரென்று நிறுத்தப்பட்டதை அடுத்து வீதிகளில் போக்குவரத்து செய்யும் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என்று மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக வீதிகளில் பொருத்தப்பட்டிருக்கும் மின் விளக்குகள் எரியாமையால் வீதிகள் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன. இதற்குக் காரணம் சிலரின் நாசகார செயல்கள் எனவும், இந்தச் செயல்களால் வீதிகளில் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகள் அதிக விபத்துக்களை சந்திக்கும் நிலமை ஏற்பட்டுள்ளது எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இருட்டில் வீதிகளில் பயணிக்கும் போது அங்கும் இங்கும் பல கட்டாக்காலி மாடுகள் மற்றும் தெரு நாய்களில் சிக்குண்டு பல விபத்துக்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களும் அதிகம் காணப்படுகிறது.



இதனை கருத்தில் கொண்டு பொது மக்கள் சிலர் நாவிதன்வெளி பிரதேச சபை அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கின்றனர்.

அத்தோடு நாவிதன்வெளி பிரதேச சபை அதிகாரிகள் துரிதகதியில் கவனம் செலுத்தி வீதிகளின் மின் விளக்குகளை மக்கள் பாவனைக்கு உகந்த வகையில் திருத்தி அமைத்து தருமாறும் ே இது போன்ற அசம்பாவிதங்களுக்கு இடமளிக்கக் கூடாது எனவும் மக்கள் வலியுறுத்தி கூறியுள்ளனர்.






# 'சீ தமிழ் ஸரிகமபா சீசன் 5' இற்கு தெரிவான அம்பாறை பாடகர் சபேசன்!

**(வி.ரி. சகாதேவராஜா)**

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் விநாயகபுரத்தை சேர்ந்த இளம் பாடகர் சுகிர்தராஜா சபேசன் இந்திய மண்ணில் சீ தமிழ் தொலைக்காட்சில் இடம்பெறும் 'சரிகமபா சீஸன் 5' இற்கான பாடல் நிகழ்ச்சியில் தெரிவாகியுள்ளார்.

வரலாற்றில் அம்பாறை மாவட்டத்தில் இருந்து 'சீ தமிழ் ஸரிகமபா' நிகழ்வில் பாடுவதற்கு தெரிவான முதல் பாடகர் சபேசன் என்பது பெருமைக்குரியது.

தெரிவானபோது மேடையில் உணர்ச்சி வசப்பட்டு அழுதழுது தனது விளக்கத்தை நடுவர்களிடம் வழங்கினார்.

தான் அதிஸ்டமில்லாதவன். பட்டதாரியான பின்னரும் கடந்த ஐந்து வருடங்களாக தொழிலின்றி குடும்பத்தை வழிநடத்த சிரமப்பட்டுக் கொண்டிருப்பதாக தெரிவித்தார்.

இங்கு இப்படி முதல் சுற்றில் ஜெயித்தது வாழ்க்கையில் மறக்க முடியாது. மிகவும் மகிழ்ச்சி என்றும் அவரது அம்மாவுக்கும் அனைவருக்கும் நன்றிகளைக் கூறினார்.

அவரது தெரிவுக்கு சரமாரியாக சமூக வலைத்தளங்களில் பாராட்டுகள், வாழ்த்துக்கள் குவிந்து வருகின்றன.

சபேசன்பாடசாலை மற்றும் கிராமத்து கலை நிகழ்வுகளில் தன்னுடைய வசீகரமான குரல் வளத்தால் பல பாடல்களைப் பாடி கிராமத்தவர்களின் பாராட்டைப் பெற்றவர்.

சக்தி டிவி 2014 ஆம் ஆண்டு நடத்திய 'சக்தி சூப்பர் ஸ்டார்' நிகழ்ச்சியில் சுரநெைச–ருி மகுடத்தினைப் பெற்றார்.

இதன்பின் இலங்கை முழுவதும் இடம்பெறுகின்ற இசை நிகழ்ச்சிகளில் இவருடைய குரல் ஒலிக்கத் தொடங்கியது.

தன்னுடைய இசை வாழ்வில் உச்சம் காண நினைக்கும் இந்த இசைப்பிரியனுக்கு இந்திய மண்ணில் தடம் பதிக்கின்ற வாய்ப்பு கிடைத்திருக்கிறது.

தனக்கு கிடைத்த ஒவ்வொரு வாய்ப்பையும் சரியாக பயன்படுத்தும் சபேஷன் 'சீ தமிழ் சரிகமப' மேடையிலும் சாதனை படைக்க வேண்டும் என்று வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.





# கே.எஸ்.ஸி. தொடர்ச்சியாக பூப்பந்தாட்டத்தில் முதலிடம்!

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச செயலக மட்ட பூப்பந்தாட்ட போட்டிகளில் காரைதீவு விளையாட்டு கழகம் இந்த முறையும் ஆண், பெண் இரண்டு பிரிவுகளுக்குமான போட்டிகளிலும் முதலிடங்களைப் பெற்றுச் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

காரைதீவு பிரதேச செயலக மட்ட விளையாட்டு விழாவின் பூப்பந்தாட்ட போட்டிகள் நிந்தவூர் எம்.ஏ.சி. விளையாட்டு பூங்காவில் மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

ஆண்களுக்கான போட்டியில் காரைதீவு வி.க. முதலிடத்தையும், காரைதீவு பூப்பந்தாட்ட வி.க. இரண்டாமிடத்தையும் பெற்றுக் கொண்டன.

பெண்களுக்கான போட்டியில் காரைதீவு வி.க. முதலிடம் பெற்றுக் கொண்டது.



# நிந்தவூரில் நடைபெற்றுள்ள மாபெரும் இலவச ஆயுள்வேத மருத்துவ முகாம்!





(அபு அலா)

கிழக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்களத்தின் அனுசரணையுடன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் வழிகாட்டலின் கீழ், நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையால் ஏற்பாடு செய்யப்பட்ட இலவச ஆயுள்வேத வைத்திய முகாம் நேற்று (24) சனிக்கிழமை இடம்பெற்றது.

நிந்தவூர் ஜும்மா பெரிய பள்ளிவாயலின் முன்பாக இடம்பெற்ற இந்த வைத்திய முகாம் “ஆயுள்வேத, யுனானி வைத்திய வாழ்க்கை முறையூடாக நீரிழிவு நோயற்ற நாட்டை கட்டி எழுப்புவோம்” எனும் தொனிப்பொருளில் இடம்பெற்றது.

இதில் மிக அதிகளவான நோயாளர்கள் வருகை தந்து வைத்திய ஆலோசனையை பெற்றுக்கொண்டனர். இரத்தம் மற்றும் குருதி அமுக்க பரிசோதனை யையும் இலவசமாகப் பெற்றுக் கொண்டனர்.

தொடர்ச்சி▼

# நிந்தவூரில்...

தொடர்ச்சி▲



உடல்வலி, உடற்பருமன், தோல் நோய்கள், நீரிழிவு, இரத்த அழுத்தம் பெண்கள் தொடர்பான நோய்கள், பக்கவாதம் போன்ற பல்வேறுபட்ட நோய்களுக்கான வைத்திய ஆலோசனை மற்றும் மருந்துகளையும் இலவசமாக பெற்றுக்கொண்டனர்.

இந்த மாபெரும் இலவச மருத்துவ முகாமில் கிழக்கு மாகாண சுதேச வைத்திய திணைக்களத்தின் மாகாண ஆணையாளர் வைத்தியர் எம்.ஏ.நபீல், நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் யூ.எல்.நிஹாயா, நிந்தவூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி உள்ளிட்ட வைத்திய குழுவினர் மற்றும் உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் பங்கேற்றனர்.

அங்கு வருகை தந்த அனைவருக்கும் மூலிகை இலைக் கஞ்சி வழங்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.



# இறக்காமத்துக்குத் தனியான நீதிமன்றம் உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

## உதுமாலெப்பை எம்.பி. நாடாளுமன்றில் கோரிக்கை

(கே. எ. ஹமீட்)

இறக்காமத்துக்கான தனியான நீதிமன்றத்தை உருவாக்க நீதி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். உதுமாலெப்பை கோரிக்கை விடுத்துள்ளார்.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக் கோவை (திருத்தம்) சட்டமூல குழு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள இறக்காமப் பிரதேசத்தில் சுமார் 18000 மக்கள் வாழ்கின்றனர். இதில் 94 வீதமான சுமார் 17000 இற்கும் மேற்பட்ட மக்கள் தமிழைத் தாய் மொழியாக கொண்டுள்ளனர். 12 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கியதான இறக்காமப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசமானது 2012 ஆம் ஆண்டுவரை அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்தின் கீழ் காணப்பட்டது.

பின்னர் அது அம்பாறை நீதி நிர்வாக வலயத்தின் கீழ் எவ்வித அறிவித்தலும் இன்றி மாற்றப்பட்டது. சிங்கள மொழியை நீதிமன்ற மொழியாக கொண்ட அம்பாறை நீதி நிர்வாக வலயத்தின் கீழ் தமிழ் மொழியைத் தாய் மொழியாக கொண்ட இறக்காமப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பிரதேசம் இணைக்கப்பட்டமை அந்தப் பிரதேசத்தில் வாழும் மக்களது அடிப்படை உரிமையை மீறும் ஒரு செயலாகும்.

அத்தோடு இந்தப் பிரதேசத்தில்



வாழும் 94 வீதமான தமிழ் பேசும் மக்கள் அம்பாறை நீதிமன்றங்களில் தமது வழக்கு நடவடிக்கைகளை தமக்கு பரீட்சயமற்ற சிங்கள மொழியில் தாக்கல் செய்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அத்தோடு வழக்கு நடவடிக்கைகளை கையாள்வதிலும் சிரமப்படுகின்றனர்.

நீதிமன்ற நடவடிக்கைகளுக்காகத் தமிழில் இருந்து சிங்களத்துக்கும் சிங்களத்திலிருந்து தமிழுக்கும் மொழி பெயர்ப்பு செய்வதற்காக வழக்குச் செலவுக்கு மேலதிகமாக பெருந்தொகையான பணத்தை செலவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது. அத்தோடு வழக்கு நடவடிக்கைகளின் போதும் சாட்சியங்களின் போதும் நீதிமன்றின் பெறுமதியான நேரத்தை மொழிபெயர்ப்புக்காக செலவிட வேண்டிய துரதிர்ஷ்டவசமான நிலையும் ஏற்பட்டுள்ளது.

இறக்காமப் பிரதேசமானது புவியியல் ரீதியாக சிங்கள மொழியை நீதிமன்ற மொழியாக கொண்ட அம்பாறை நீதி நிர்வாக வலயத்துக்கும் தமிழ் மொழியை நீதிமன்ற மொழியாகக் கொண்ட அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்துக்கும் இடையில் அமையப் பெற்ற பிரதேசமாகும்.

சிங்கள மொழியிலான அம்பாறை நீதி நிர்வாக வலயத்தினுள் இக்கினியாகல, உகன, தமன, மங்கலகம, மத்தியமுகாம், பக்கியல்ல மற்றும் அம்பாறை ஆகிய போலிஸ் பிரிவுகள் அடங்குகின்றன. இதில் ஒரே ஒரு தமிழ் பேசுகின்ற மக்களை கொண்ட இறக்காமப் பிரதேசமானது பொருத்தமற்ற வகையில் இணைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியிலான அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்தினுள் அக்கரைப்பற்று மற்றும் திருக்கோவில் ஆகிய பொலிஸ் பிரிவுகள் மாத்திரம் உள்ளடங்குகின்றன. எனவேதான் தமிழ் பேசுகின்ற மக்களை கொண்ட இறக்காமப் பிரதேசமானது தமிழ் மொழியை நீதிமன்ற மொழியாக கொண்ட அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்தின் கீழ் கொண்டு வரப்பட வேண்டும் அல்லது இறக்காமப் பிரதேசத்துக்கான தனியான நீதிமன்றம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை நீதி அமைச்சு மேற்கொள்ள வேண்டும்.

இது தொடர்பில் மேல் நீதிமன்றம் உள்ளடங்களாக நீதிமன்றங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பில் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைகளை மீளாய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவால் 2021 ஆம் ஆண்டு விதந்துரைக்கப்பட்ட அறிக்கையில் மேற்சொல்லப்பட்ட இறக்காமப் பிரதேசமானது அக்கரைப்பற்று நீதி நிர்வாக வலயத்தின் கீழ் கொண்டுவரப்படுவது தொடர்பில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுங்கள்.- என்றார்.

# சம்மாந்துறை ஆஸ்பத்திரிக்கு இலத்திரனியல் உபகரணங்கள்

(றியாஸ் ஆதம்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் நேற்று சனிக்கிழமை (24) சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

சீன அரசின் நிதியுதவியின் ஊடாக அந்த வைத்தியசாலையில் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவுள்ள சகல வசதிகளையும் கொண்ட கட்டடத் தொகுதியையும் பிராந்திய பணிப்பாளர் இன்போது பார்வையிட்டார்.

இதேவேளை சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்கு அத்தியாவசியத் தேவையாக இருந்த ஒரு தொகுதி இலத்திரனியல் உபகரணங்களையும் பிராந்திய பணிப்பாளர், வைத்திய அத்தியட்சகர் டாக்டர் பீ.பிரபாசங்கரிடம் கையளித்தார்.

இந்த நிகழ்வில் பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.சீ.எம். மாஹிர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின்




கணக்காளர் திருமதி உசைனா பாரிஸ் உட்பட சம்மாந்துறை வைத்தியசாலையின் வைத்தியர்கள், கணக்காளர் மற்றும் வைத்தியசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# அதிபர், ஆசிரியர் மீது வாள்வெட்டு; வெள்ளியன்று ஆலையடிவேம்பில்!

## திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் கண்டனம்

(வி.ரி. சகாதேவராஜா)

ஆலையடிவேம்பில் நேற்று முன் தினம் அதிபர், ஆசிரியர் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டு சம்பவம் தொடர்பாக திருக்கோவில் வலயக் கல்விப் பணிப்பாளர் இரா.உதயகுமார் தமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கண்டன அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கடந்த வெள்ளிக்கிழமை (23) எமது கல்வி வலயத்துக்கு உட்பட்ட திருநாவுக்கரசு வித்தியாலயத்தின் அதிபரும் ஆசிரியரும் கொடூரமான முறையில் தாக்கப்பட்டு வெட்டப்பட்ட கொடூரமான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்தச் சம்பவம் மிகுந்த வேதனையையும் அதிர்ச்சியையும் அளிக்கிறது.

குறிப்பாக இந்தக் கல்வியாளர்கள் தமது கடமைகளை அர்ப்பணிப்புடனும், மாணவர்களின் நலனுக்காகவும் செய்து வரும் வேளையில் இந்தக் கொடூரமான செயலை கண்டிக்கிறோம். இத்தகைய வன்முறைகள் எந்தச் சூழ்நிலையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவை.

பாதிக்கப்பட்டவர்கள் விரைவில் குணமடையப் பிரார்த்திப்பதோடு, இதுபோன்ற செயல்களுக்கு எதிராக அனைத்து தரப்பினரையும் ஒன்றுபட்டு நிற்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அனைவருக்கும் பாதுகாப்பான கல்விச் சூழலை உறுதி செய்வதற்காக ஒன்றிணைந்து செயல்படுவோம்.- என்றுள்ளது.



அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஆலையடிவேம்பு திருநாவுக்கரசு வித்தியாலய அதிபர் மற்றும் ஆசிரியர் மீது வாள் வெட்டு தாக்குதல் மேற்கொள்ப்பட்ட நிலையில் அவர்கள் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (23) மாலை அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் பொது மக்களின் உதவியுடன் அக்கரைப்பற்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த ஆசிரியரின் கீழ் பாடசாலையில் கல்வி கற்கும் க.பொ.த. சாதாரண தர மாணவர்கள் சிலருக்கு விசேட பயிற்சி செயலமர்வு தம்பட்டையில் இடம்பெறவிருந்தது.

இந்நிலையில் அதிபரின் உத்தரவுக்கு அமைய, சம்பந்தப்பட்ட மாணவர்களின் வீடுகளுக்குச் சென்ற ஆசிரியர் பயிற்சிச் செயலமர்வுக்குச் செல்வதற்கு அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஸ்ண தேசிய பாடசாலை முன்பாக ஒன்று கூடுமாறு கூறியுள்ளார்.

இவ்வாறு சில மாணவர்களது வீடுகளுக்குச் சென்று தகவலை வழங்கிவிட்டு இன்னுமொரு மாணவியின் வீட்டுக்குச் சென்று தகவலை சொல்ல முற்பட்ட நிலையில் அந்த வீட்டில் சலசலப்புச் சத்தம் கேட்டு ள்ளது.

இந்த நிலையில் தான் சென்ற மோட்டார் சைக்கிளில் திரும்ப எத்தணித்துள்ளார்.

இந்த நிலையில் அந்த வீட்டில் இருந்து வெளிவந்த ஒருவர் ஆசிரியரை வாளால் தாக்கியுள்ளார் என்று அதிபர் கூறினர்.

இதனையடுத்து குறித்த ஆசிரியர் தனக்கு தகவலை வழங்கிய நிலையில் தானும் அவ்விடத்துக்குச் சென்றார் என்றும் அங்கு ஆசிரியரின் மோட்டார் சைக்கிளை குறித்த நபர் உடைப்பதை அவதானித்தார் எனவும் அதிபர் கூறினார்.

உடன் தான் ஆசிரியரை காப்பாற்றி கொண்டு செல்வதற்காக தனது மோட்டார் சைக்கிளில் ஆசிரியரை ஏற்றுவதற்கு முற்பட்டபோது, தனது மோட்டார் சைக்கிளையும் உதைத்த அந்த நபர், வாளால் தன்னையும் தாக்கினார் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் இருவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர் என்றும் பாதுகப்பற்ற நிலையில் ஆசிரியர்களும் அதிபர்களும் கற்பித்தல் நடவடிக்கையில் எவ்வாறு ஈடுபடுவது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.



# ஐகோனிக் யூத்ஸ் மற்றும் பிறிவோர்க் அமைப்பின் ஏற்பாட்டில் இரத்ததானம்

(றிஸ்வான் சாலிஹு் )

அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கியில் காணப்படும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக ஐகோனிக் யூத்ஸ் ஸ்ரீ லங்கா மற்றும் பிறிவோர்க் இளைஞர் அமைப்பு ஏற்பாடு செய்த மாபெரும் இரத்ததான முகாம், ஐகோனிக் அமைப்பின் தவிசாளர் சிமாம் முஸ்தாக் தலைமையில் சனிக்கிழமை (24) பள்ளிக்குடியிருப்பு அல் - பாயிஷா மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்த அமைப்பு உறுப்பினர்களின் அயராத முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இரத்தான முகாமில் சுமார் 95 ஆண், பெண் இருபாலாரும் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, நல் நோக்கத்துக்காகத் தங்களது உதிரத்தைத் தானமாக வழங்கினர்.

இந்தப் பிராந்தியத்திலுள்ள வைத்தியசாலைகளில் இரத்த தட்டுப்பாடு நிலவி வருவதால் பள்ளிவாசல்கள்,

தொடர்ச்சி▼

# ஐகோனிக் யூத்ஸ் மற்றும் பிறிவோர்க் அமைப்பின் ஏற்பாட்டில் இரத்தானம்

தொடர்ச்சி▲

சமூக அமைப்புகள் இவ்வாறான சமூக தேவைகளை முன் நிறுத்தி குறிப்பாக இளைஞர், யுவதிகளின்பங்களிப்புடன்இப் பாரிய முயற்சியை செய்து வருகின்றன.

ஐகோனிக் யூத்ஸ் அமைப்பானது இந்தப் பிராந்தியத்தில் சமூக சேவை விடயங்களான இரத்தானம் வழங்கல், சிரமதான நிகழ்வு, வசதி குறைந்த மாணவர்கள் கல்வி கற்பதற்கான அத்தியவசிய உபகரணங்கள் வழங்கல், பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி வழங்கல் போன்ற சமூக ரீதியான செயற்பாடுகளை செய்து வருகின்றனர்.





இந்த நிகழ்வில் பங்கு கொண்ட அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை இரத்த வங்கி மற்றும் பள்ளிக்குடியிருப்பு பிறிவோர்க் அமைப்பினருக்கு நினைவுச் சின்னம் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# சிவானந்தா - கோணேஸ்வரா கிரிக்கெட்; பொன்னணிகளின் சமர் இன்று ஆரம்பம்!

(வி.ரி.சகாதேவராஜா)

மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலயம் மற்றும் திருகோணமலை கோணேஸ்வரா இந்துகல்லூரி ஆகிய வற்றுக்கிடையிலான பொன்னணிகளின் 30 ஆவது கிரிக்கெட் சமர் இன்று (25) ஞாயிற்றுக்கிழமை கல்லடி சிவானந்தா மைதானத்தில் ஆரம்பமானது.

உலகின் முதல் தமிழ் பேராசிரியர் முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளாரின் முயற்சியால் ஆரம்பித்த இருபெரும் பாடசாலைகளின் பொன்னணிகளின் கிரிக்கெட் சமரின் ஆரம்ப நிகழ்வில் ஆன்மிக அதிதியாக இராம கிருஷ்ண மடத்தின் கல்லடி ஆச்சிரமம் தலைவர் ஸ்ரீமத் சுவாமி நீலமாத வானந்தா ஜி கலந்து கொண்டு ஆசி வழங்கினார்.

பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க.குணநாதன் கலந்து கொண்டார்.

திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் தினகரன் ரவி மற்றும் மட்டக்களப்பு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி நிதர்சினி மகேந்திரன் குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

முன்னதாக பாண்ட் வாத்தியம் முழங்க அதிதிகள் வரவேற்கப்பட்டனர்.

பின்னர் மைதானத்தில் அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றுப் போட்டி ஆரம்பமானது.







# அஸ்தமிக்கிறதா குர்திஷ்தான் கனவு? உதயமாகிறதா பலூசிஸ்தான் தேசம்?



■ ஐங்கரன் விக்கினேஸ்வரா

துருக்கியில் நாற்பது ஆண்டுகால தனிநாட்டு போராட்டத்தில் ஈடுபட்ட குர்திஷ் போராளிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக ஒரு வரலாற்று முடிவை அறிவித்துள்ளனர். இதேவேளை, பலூசிஸ்தான் பாகிஸ் தானில் இருந்து சுதந்திரம் பெற்றதாக அறிவித்துள்ளது. இவ்விரு தேசிய இனங்களின் உரிமைப் போராட்டத்தின் வரலாற்றுத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட அலசல் இது.)

நீண்ட காலமாக தங்கள் இன அடையாளத்தைத் தக்கவைக்க குர்திஷ் மக்கள் போராடினர். ஆனால் அவர்களை எல்லை தாண்டியும் அழித்தொழிக்கத் துடித்தது துருக்கி. தனிநாடு கோரிப் போராடும் குர்திஷ் போராளிகள் அமைப்பான பி.கே.கே. க்கும் துருக்கிக்கும் இடையிலான மோதல் 1984 இல் தொடங்கியது. இந்த மோதல் பல்லாயிரக் கணக்கான இறப்புகளுக்கு வழிவகுத்தது.

துருக்கியில் நாற்பது ஆண்டுகால தனிநாட்டு போராட்டத்தில் ஈடுபட்ட குர்திஷ் போராளிகள் போர் நிறுத்தத்தை தற்போது அறிவித்துள்ளனர்.

நான்கு தசாப்த கால ஆயுத மோதலுக்குப் பிறகு, துருக்கியுடனான புதிய சமாதான முயற்சியின் ஒரு பகுதியாக, குர்திஷ் போராளிக் குழுவான 'குர்திஷ்தான் தொழிலாளர் கட்சி' (பி.கே.கே.) ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக ஒரு வரலாற்று முடிவை அறிவித்துள்ளது.

இதற்கு முன்பாக கடந்த 27.02.2025 குர்திஷ் அரசியல் குழு, பி.கே.கே., தனது ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு கலைந்து செல்லுமாறு சிறையில் இருந்து குர்திஷ் போராளித் தலைவர் அப்துல்லா ஓஜலான் அழைப்பை விடுத்தார்.

### துருக்கியின் எல்லை தாண்டிய அழிப்பு

நீண்ட காலமாக போராடி வரும் குர்திஷ் மக்களை எல்லை தாண்டியும் அழித்தொழித்து வந்தது துருக்கி.

சிரியாவில் கடந்த ஆண்டு இறுதியில் குர்திஷ் போராளிகளுக்கு எதிராக தரை வழியாகவும், வான் வழியாகவும் துருக்கி ராணுவம் தாக்குதல் நடத்தியதால் பாரிய அழிவை அவர்கள் சந்தித்தனர்.

நாற்பது ஆண்டுகால கிளர்ச்சியை நடத்திவரும் குர்திஷ் போராளிகள், தங்கள் சிறையில் அடைக்கப்பட்ட தலைவரால் போராட்ட அமைப்பை நிராயுதபாணியாக்க அழைப்பு விடுத்தார்.

### நான்கு தசாப்த போராட்டம்

நான்கு தசாப்த கால ஆயுத மோதலுக்குப் பிறகு, துருக்கியுடனான புதிய சமாதான முயற்சியின் ஒரு பகுதியாக, குர்திஷ் போராளிக் குழுவான 'குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி' (பி.கே.கே.) ஆயுதப் போராட்டத்தைக் கைவிடுவதாக ஒரு வரலாற்று முடிவை அறிவித்துள்ளது.

குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி (பி.கே.கே.) எடுத்த இந்தத் தீர்மானம் 1980 களில் இருந்து பல்லாயிரக் கணக்கான உயிர்களைக் கொன்ற பல தசாப்த கால மோதலை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒரு முக்கிய படியாகக் கருதப்படுகிறது.

1999 முதல் இஸ்தான்புல்லுக்கு அருகிலுள்ள ஒரு தீவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள பி.கே.கே. தலைவர் அப்துல்லா ஓஜலான், துருக்கியுடனான ஒரு புதிய சமாதான முயற்சியின் ஒரு பகுதியாக கடந்த பெப்ரவரி மாதத்தில் தனது குழுவை ஒரு மாநாட்டைக் கூட்டி முறையாகக் கலைக்க முடிவு செய்யுமாறு வலியு றுத்தினார்.

இவ்வருடம் மார்ச் மாதத்தில் பி.கே.கே. ஒருதலைப்பட்ச போர் நிறுத்தத்தை அறிவித்தது. ஆனால் சமாதானப் பேச்சுக்கான சட்ட கட்டமைப்பை உருவாக்குவது உட்பட நிபந்தனைகளை விதித்தது.

குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி 1984 முதல் ஆயுதமேந்திய கிளர்ச்சியை வழிநடத்தி வந்தது. இந்தப் போராட்டங்களால் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் கொல்லப்பட்டன. இதனால் துருக்கி மற்றும் அதன் மேற்கத்திய நட்பு நாடுகளால் ஒரு பயங்கரவாதக் குழுவாக பட்டியலிடப்பட்டது.

சிரியாவில் ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றம், லெபனானில் ஹெஸ்பொல்லா குழுவின் போராட்டம் மற்றும் காசாவில் இஸ்ரேல் – ஹமாஸ் போர் உள்ளிட்ட பிராந்தியத்தில் ஏற்பட்ட பெரிய மாற்றங்களின் பின்னணியில் குர்திஸ் தான் கட்சியின் அறிவிப்பு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### தாயகம் இல்லாத குர்திஷ் மக்கள்

மத்திய கிழக்கில் பாரம்பரியமாகவே வாழ்ந்து வரும் இனமான குர்திஷ் மக்கள் (Kurdish) தென்கிழக்கு துருக்கி, வட கிழக்கு சிரியா, வட ஈராக், வடமேற்கு ஈரான், தென்மேற்கு ஆர்மேனியா ஆகிய பகுதிகளில் அதிகம் வாழ்கின்றனர்.

ஆயினும் தாயகம் இல்லாத மிகப்பெரிய இனக் குழுவான குர்திஷ் மக்கள் துருக்கியிலும், சிரியாவிலும் பிற இடங்களிலும் நீண்டகாலமாக துன்புறுத்தலை எதிர்கொண்டுள்ளனர்.

தொடர்ச்சி▼







# அஸ்தமிக்கிறதா குர்திஷ்தான் கனவு? உதயமாகிறதா பலூசிஸ்தான் தேசம்?



**தொடர்ச்சி▲**

ஐந்து நாடுகளில் சிதறி வாழும் குர்திஷ் மக்களின், பேரிடியாக ஐந்து நாடுகளிலுமே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட இனமாக கருதப்படுகின்றனர். இதன் விளைவாக விடுதலை போராட்டத்துக்கும் தள்ளப்பட்டனர்.

### பலூசிஸ்தான் தனிநாட்டு பிரகடனம்

பலூசிஸ்தான் பாகிஸ்தானில் இருந்து சுதந்திரம் பெற்றதாக மே 14 இல் அறிவித்துள்ளது. 1947 இல் பாகிஸ்தான் மத அடிப்படையில் இந்தியாவைப் பிரிந்து ஒரு தனி நாடாக உருவானது. ஆனால், உண்மையில் அது வங்காளம், பஞ்சாப், சிந்தி, பலூச்சி, பக்தூன் என ஐந்து தேசிய தேசிய இனங்களைக் கொண்டிருந்தது. மொழி அடிப்படையில் கிழக்கு வங்காளம் போராடி 1971 இல் வங்காள தேசமாக மலர்ந்தது.

இராணுவ ஆட்சி, மக்களாட்சி என எதுவாயிருந்தாலும் பாகிஸ்தானில் கோலோச்சுவது பஞ்சாபி முஸ்லீம்களும் சிந்தி முஸ்லீம்களுமே. இவர்கள் பலூச்சிகளையும் பக்தூனியர்களையும் (புத்தானியர்கள்) நீண்ட காலமாக ஒடுக்கி வருகின்றனர். அதனை எதிர்த்துப் பாகிஸ்தானில் அவ்விரு இனங்களும் விடுதலை கோரிப் போராடி வருகின்றன.

பொருளாதார ரீதியாக, மற்ற பாகிஸ்தானியர்களுடன் ஒப்பிடும்போது பலூச்சிகள் தனிநபர் வருமானம் மிகக் குறைவு. கட்டமைப்பு ரீதியான பொருளாதாரச் சுரண்டல், சீனா – பாகிஸ்தான் பொருளாதார வழித்தடத்தில் (CPEC) இருந்து பெரும்பாலான பலூச் சமூகத்தை விலக்கியது மற்றும் பிற பொருளாதாரத் திட்டங்களில் இருந்து அந்நியப்படுத்துதல் ஆகியவை பலூச் மக்களை போராட்ட வழியில் செயல்படத் தூண்டின.

பலூசிஸ்தான் தனி நாடு கோரிக்கை வலுத்துவரும் நிலையில், அந்த நாட்டில் மிகப் பெரிய அளவிலான மக்கள் போராட்டங்கள் அந்தப் பகுதியில் மட்டுமல்லாமல் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் நடைபெற்று வருகின்றன.

### பலூசிஸ்தான் போராட்ட வரலாறு

பிரிட்டிஷிடம் இருந்து 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 11 இல் பலூசிஸ்தான் பகுதி சுதந்திரம் பெற்றது. இதை அடுத்து 1947, டிசெம்பர் 16 இல் அந்தப் பகுதியை பாகிஸ்தானுடன் இணைப்பது தொடர்பாகப் பொது மற்றும் மேல்சபை ஆகியவற்றில் தீர்மானம் முன்மொழியப் பட்டது. ஆனால், இதனை இரு சபைகளும் நிராகரித்தன.

இந்த நிலையில், பலூசிஸ்தான் மீது பாகிஸ்தான் படையெடுப்பு நடத்தியது. காலத் பகுதி கான் மற்றும் அவரது குடும்பத்தினரை சிறை வைத்தது. அப்பகுதியின் முழுக் கட்டுப்பாட்டையும் கைப்பற்றியது. எனவே 1948 ஆம் ஆண்டு முதல் அந்தப் பகுதி பாகிஸ்தானின் முழுமையான கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

### மறைமுக இந்திய ஆதரவு

பலூசிஸ்தான் விடுதலைப் போராட்டத்துக்கு இந்தியர்கள் தார்மீக ஆதரவு செய்வதாக பலூசிஸ்தான் விடுதலை இயக்கமான ‘ஹிந்த் பலூச்’ எனும் அமைப்பு தெரிவித்துள்ளது. இது குறித்து அந்த அமைப்பின் நிறுவனர் ஜிதேந்திரானந்த் சரஸ்வதி கூறுகையில், பலூசிஸ்தான், பிரிட்டிசிடம் இருந்து சுதந்திரம் பெற்றபோதிலும், 1948 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மீள வலுக்கட்டாயமாக பாகிஸ்தானுடன் இணைக்கப்பட்டது.

பலூசிஸ்தான் மக்களின் சுதந்திர உரிமைகளுக்காக இந்தியர்கள் பங்களிப்பு செய்தனர். தங்களது அடையாளம், கலாசாரம் ஆகியவற்றின் மீது பலூசிஸ்தான் மக்கள் அதிக மரியாதை கொண்டுள்ளனர் என்றும் கூறினார். தற்போதைய சூழலில் சர்வதேச அளவில் இந்தியா முன்னணி நாடாக திகழ்வதால் பாகிஸ்தானில் இருந்து பிரித்து பலூசிஸ்தான் தனிநாடாக அமைக்க இந்தியா உதவ வேண்டும் என இந்த இயக்கம் விரும்புகிறது. இதனிடையே பலூசிஸ்தானில் ஏற்பட்டு வரும் அசம்பாவிதங்கள் தொடர்பாக ஐ.நா. சபையில் இந்தியா தொடர்ந்து கண்டனம் தெரிவித்து வருகிறது.

### பலூசிஸ்தான் இனப்படுகொலை

பலூசிஸ்தான் மக்கள் மீது தொடர்ந்தும் இனப் படுகொலை நடத்தப்பட்டு வருகிறது. இந்தப் பகுதி முழுவதும் பாகிஸ்தான் ராணுவத்தின் அராஜகம் கட்டவிழ்க்கப்பட்டுள்ளது. ராணுவத்தால் திடீரென நடத்தப்படும் குண்டு வெடிப்புகளால் நூற்றுக் கணக்கானோர் அப்பாவி மக்கள் உயிரிழக்கின்றனர்.

இந்த நிலையில், பலூசிஸ்தானில் நடைபெறும் கொடுமைகளை, மக்கள் விரோத நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் விதமாகவும், அதற்கு எதிரான மற்றும் தனிநாடு போராட்டங்களை தீவிரப்படுத்தி சர்வதேசமெங்கும் பாகிஸ்தானுக்கு எதிரான பலூசிஸ்தான் மக்களின் சுதந்திர கோஷங்கள் ஓங்கி ஒலித்து வருகின்றன.

### சீனாவின் நட்புக்கரம்

இப்போது பாகிஸ்தானுக்கு பலூச்சிஸ்தான் பிரச்சினை பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. பாகிஸ்தானில் உள்ள பலூசிஸ்தான் மாகாணத்தை தனி நாடாகப் பிரிக்கக் கோரும் இவர்களின் போராட்டத்தை நசுக்குவதில், சீனாவும் நட்புக்கரம் நீட்டிவருவது குறிப்பிடத்தக்கது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் பலூசிஸ்தானில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்துக் கணிப்பில் 37 வீதமான மக்கள் தனி பலூசிஸ்தான் தனிநாடு கோரிக்கைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.




# அம்பாறையில் போதைப் பொருள் விநியோகிக்கும் சந்தேக நபர் கைது



**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை பிரதேசத்துக்கு போதைப்பொருள் விநியோகித்தார் என்று சந்தேகத்தில் அம்பாறை தலைமையக பொலிஸார் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

அம்பாறை நகரில் நேற்று முன்தினம் (23) 40 கொகைன் போதைப் பொருள் பாக்கெட்டுகளுடன் நடமாடிய சந்தேக நபரை விசேட சோதனை நடவடிக்கையின்போது அம்பாறை பொலிஸ் தலைமையக ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் அம்பாறை நகருக்கு போதைப் பொருளை கொண்டு வந்து விநியோகம் செய்யும் பிரதான சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் போதைப்பொருள் மற்றும் ஐஸ் வலையமைப்பு தொடர்பான மேலதிக விசாரணைகளை அம்பாறை தலைமையக பிரதான பொலிஸ் பொறுப்பதிகாரி அசேல கே. ஹேரத்தின் மேற்பார்வையின் கீழ் ஊழல் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## திருமலையில் தமிழ்ச் சங்க பெருவிழா:

# தொன்மை மிகுந்த பொருள்களை தந்துதவுமாறு ஏற்பாட்டாளர் கோரிக்கை

**(ஹஸ்பர் ஏ.எச் )**

திருகோணமலை தமிழ் சங்கத்தால் எதிர்வரும் 10 ஆம் திகதி வசந்தப் பெருவிழா நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

நூற்கண்காட்சிக்காக திருகோணமலை சம்பந்தமான கல்வெட்டு ஆவணங்கள், ஓலைச்சுவடிகள், மற்றும் ஆய்வு நூல்கள் உள்நாட்டிலும், புலம் பெயர் தேசங்களிலும் வெளியீடு செய்யப்பட்ட இலக்கிய நூல்கள் வைத்திருப்போர் அவற்றைத் தந்துதவால் கண்காட்சியை சிறப்பாக நடத்துவதற்குப் பேருதவியாக அமையும் என்று ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

பெற்றுக் கொள்ளும் சகல ஆவணங்களும் மீண்டும் ஒப்ப டைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக திருமதி மர்ளியா சக்காப் - 0760691051, ந. யோகேஸ்வரன் - நூலகர் - 0703827660, திருமதி பானு சுதாகர் - 0773556563 ஆகியொருடன் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமலாக்கத் துறை மட்டுமல்ல மோடிக்கே பயப்பட மாட்டோம்

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உறுதி



எங்களை மிரட்டி அடிபணிய வைக்க முடியாது. நாங்கள் இ.டி. (அமலாக்கத் துறை) மட்டுமல்ல, மோடியே வந்தாலும் பயப்பட மாட்டோம் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்துத் துறை பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு பேசும்போது,

"அனைத்துத் துறை அலுவலர்களும் பொதுமக்களுக்கும், அரசுக்கும் பாலமாக இருந்து, அரசின் திட்டங்களை மக்களிடையே சென்றடையச் செய்து, அரசுக்கு நற்பெயரை பெற்றுத்தர வேண்டும்." என கேட்டுக் கொண்டார்.

அதன் பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"தமிழகத்துக்கான நிதி உரிமையைப் பெறுவதற்காக டெல்லியில் நடைபெற்ற நிதி ஆயோக் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டார். இதை அரசியலாக்குவதற்காக எதிர்க்கட்சியினர் விமர்சித்து வருகின்றனர்.

தமிழகத்தில் அமலாக்கத் துறை சோதனைக்கு பயந்து முதல்வர் ஸ்டாலின் டில்லி சென்றதாகவும் கூறியுள்ளனர். நாங்கள் இ.டி. (அமலாக்கத் துறை) மட்டுமல்ல, மோடியே வந்தாலும் பயப்பட மாட்டோம். எங்களை மிரட்டி அடிபணிய வைக்க பார்த்தார்கள். மிரட்டி அடி பணிய வைப்பதற்கு திமுக ஒன்றும் அடிமை கட்சி அல்ல.

கருணாநிதியால் கட்டிக் காக்கப்பட்ட, பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றக்கூடிய சுயமரியாதைக் கட்சி தி.மு.க. தவறு செய்தவர்கள்தான் பயப்பட வேண்டும். நாங்கள் யாருக்கும் அடிபணியவும் வேண்டியதில்லை, பயப்படவும் அவசியமில்லை. எதையும் சட்டப்பூர்வமாக சந்திப்போம்." என்று தெரிவித்துள்ளார்.

# மாநிலங்களுக்கான வரி பங்கை 50 வீதமாக உயர்த்த வேண்டும்

## நிதி ஆயோக் கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் தெரிவிப்பு



நாட்டிலுள்ள நகர்ப்புற மேம்பாட்டுக்கு பெருமளவு நிதி கொண்ட பெரிய திட்டம் அவசியம் என்றும் மத்திய வருவாயில் மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு பங்கை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும் எனவும் நிதி ஆயோக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

டில்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நிதி ஆயோக் கூட்டம் நடைபெற்றது. இதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசுகையில்,

"சமத்துவம் மற்றும் சமூகநீதி அடிப்படையில், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நீடித்த பொருளாதார வளர்ச்சிதான் எங்களின் தொலைநோக்குப் பார்வை. "எல்லோர்க்கும் எல்லாம்" என்ற அந்தக் குறிக்கோளுக்குப் பெயர்தான் திராவிட மாடல். எங்கள் அரசில் வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் தமிழகத்தில் ஒரு டிரில்லியன் டொலர் பொருளாதார வளர்ச்சியை இலக்காக நிர்ணயித்து செயலாற்றி வருகிறோம். அதன் பயன்கள்தான் வளர்ச்சிக் குறியீடுகளாக எதிரொலிக்கின்றன.

குறிப்பாக, அண்மைக் காலங்களில் ஆண்டுதோறும் 8 சதவீதத்துக்கும் மேலான வளர்ச்சி. கடந்தாண்டு நாட்டிலேயே அதிகமாக 9.69 சதவீத வளர்ச்சி என்ற பாய்ச்சலில் உள்ளது. இந்திய விடுதலை நூற்றாண்டில் 4.5 டிரில்லியன் டொலர் பொருளாதாரத்தை அடைய வேண்டும் என்ற சவாலை வைத்து உழைத்து வருகிறோம். இந்தியாவின் இலக்கான 30 டிரில்லியன் டொலர் பொருளாதாரத்தில், எங்கள் பங்களிப்பு வலுவாக இருக்கும் என உறுதியளிக்கிறேன்.

சுத்தமான கங்கை திட்டம் போல், தமிழகத்தில் காவிரி, வைகை, தாமிரபரணி உள்ளிட்ட முக்கியமான ஆறுகள், நாட்டிலுள்ள பிற முக்கியமான ஆறுகளையும் சுத்தம் செய்து மீட்டெடுக்க புதிய திட்டத்தை உருவாக்கி, திட்டங்களுக்கு அனைத்து மாநில தொடர்பு மொழியான ஆங்கிலத்தில் பெயரிட வேண்டும். அவற்றை மாநிலங்கள் தங்கள் மொழியில் மொழிபெயர்த்துக் கொள்ளும்.

எதிர்வரும் 2047 ஆம் ஆண்டுக்குள் 30 டிரில்லியன் டொலர் பொருளாதாரத்தை அடையவும், இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்குமான பிரதமரின் தொலைநோக்குப் பார்வை பாராட்டத்தக்கது. அவரது தொலைநோக்குப் பார்வையை அடைவதற்கு, கூட்டுறவு கூட்டாட்சி என்பது அவசியமான அடித்தளமாகும். எனவே, தமிழகம் உள்ளிட்ட மாநிலங்கள் தங்கள் வளர்ச்சி இலக்குகளை அடைய, மத்திய அரசு பாகுபாடின்றி ஒத்துழைப்பு தரவேண்டும்.

மத்திய - மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டங்களுக்கான மாநில பங்கு தொடர்ந்து உயர்ந்து வருவது, தமிழகம் போன்ற மாநிலங்களின் நிதிநிலையை மேலும் பாதிக்கிறது. ஒருபுறம் மத்திய வரிப்பகிர்வு குறைவதால், மாநில அரசுகளுக்கு ஏற்படும் பாதிப்புகள், மறுபுறம் மத்திய அரசு திட்டங்களுக்கு மாநில அரசு செலவிடும் அதிக நிதி ஆகியவற்றால் பெரும் சுமை மாநில அரசுகளுக்கு ஏற்படுகிறது. எனவே, மத்திய வருவாயில் மாநிலங்களுக்கான வரிப்பகிர்வு பங்கை 50 சதவீதமாக உயர்த்துவதை மத்திய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

அனைத்து மக்களும் வளமுடன் வாழும் வகையில், அனைத்து பண்பாடுகளும் செழிக்கும் வகையில் பன்முகத் தன்மை கொண்ட வலிமையான நாடாக இந்தியா திகழ தமிழகம் தனது சிறந்த பங்களிப்பை என்றும் வழங்கும். தற்சார்புடனும், தனித்துவமான அடையாளங்களுடனும் ஒவ்வொரு மாநிலமும் செழித்து வளரும்போதுதான் ஒன்றுபட்ட வலிமையான இந்தியத் திருநாடு உலக அரங்கில் உயர்ந்து நிற்கும். அதற்கு தமிழகம் எப்போதும் துணை நிற்கும்." என்று தெரிவித்துள்ளார்.






# உக்ரைன் - ரஷ்யா இடையில் பணயக் கைதிகள் பரிமாற்றம்

உக்ரைன் மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இடையில் பணயக் கைதிகள் பரிமாற்றம் இடம்பெற்று வருவதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இரு நாடுகளின் அதிகாரிகளுக்கு இடையில் துருக்கியில் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றது.

இதன் பின்னரான ஒப்பந்தத்தையடுத்து, பணயக் கைதிகளின் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளது.

அதற்கமைய, இரண்டாவது நாளாக 307 பணயக் கைதிகளின் பரிமாற்றம் இடம்பெற்றுள்ளதுடன், 3 நாள்களில் 1,000 பணயக் கைதிகள் விடுவிக்கப்படுவார்கள் எனவும் சர்வதேச ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

# பிரித்தானிய குடியுரிமை பெற விண்ணப்பிக்கும் அமெரிக்கர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு




பிரித்தானிய குடியுரிமை பெற விண்ணப்பிக்கும் அமெரிக்கர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருவதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவில் நவம்பர் மாதத்தில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றதிலிருந்து பிரித்தானிய குடியுரிமை பெறுவது தொடர்பில் இணையத்தில் தேடுவோர் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவில் இந்தாண்டின் முதல் மூன்று மாதங்களில் இதுவரையில் இல்லாத வகையில், அதிகளவிலான அமெரிக்கர்கள் குடியுரிமை பெற விருப்பம் தெரிவித்துள்ளனர் என பிரித்தானியா உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும், ஜனவரி முதல் மார்ச் வரையிலான 3 மாதங்களுக்கு இடையில் மட்டும் 1,900 இற்கும் மேற்பட்ட கோரிக்கைகள் பெறப்பட்டன என பிரிட்டன் அரசு தெரிவித்தது.

பிரித்தானியாவில் மனைவி, பெற்றோர், குடும்பத்தினரைக் காரணமாகக் கொண்டு தான் பெரும்பாலானோர் குடியேறிய விரும்பியதாகவும் தொழிலாளர்களுக்கான தற்காலிக விசாக்களுடன் பிரித்தானியாவில் குடியேற சிலர் விரும்பியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ட்ரம்ப்பின் ஆட்சியால் தான் அமெரிக்காவில் இருந்து பிரிட்டனுக்கு குடியேற முயல்வதாக சமூக ஊடகங்களில் மக்கள் கருத்து வெளியிட்டு வருகின்றனர்.

# இந்தோனேசியாவுடன் இணைய சீனா தயார்



இந்தோனேசியாவுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளதாக பிரதமர் லி கியாங் தெரிவித்துள்ளார்.

ஒத்துழைப்பை வலுப்படுத்தவும், சுயாதீன ஒத்துழைப்பின் கட்டமைப்பை மேலும் ஒருங்கிணைக்கவும், அபாயங்கள் மற்றும் சவால்களை கூட்டாக எதிர்கொள்ளவும், பொதுவான வளர்ச்சியை மேம்படுத்தவும் இந்தோனேசியாவுடன் இணைந்து பணியாற்ற சீனா தயாராக உள்ளது என சீனாவின் பிரதமர் லி கியாங் தெரிவித்துள்ளார்.


ஜகார்த்தாவில் இந்தோனேசிய ஜனாதிபதி பிரபோவோ சுபியாண்டோவுடனான சந்திப்பின்போதே அவர் இந்த கருத்துக்களை தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் 03

கனடா முரசு

ஞாயிற்றுக்கிழமை 25/05/2025

**கனடாவில் மிகவும் வேகமாக வாகனம் செலுத்திய இருவர் கைது**




கனடாவின், ஒன்டாரியோ மாகாணம் மிசிசாகா பகுதியில் 03

# கரி ஆனந்தசங்கரியின் பதவி ஏற்பு நிகழ்வு நேற்று



கனடாவின் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சராக ஹறி ஆனந்தசங்கரியின் பதவி ஏற்பு நிகழ்வு மிகவும் சிறப்பாக நேற்று நடைபெற்றது

அண்மையில் கனடாவில் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் மார்க் கார்னி தலைமையிலான தரப்பு வெற்றி பெற்ற நிலையில் புதிய அமைச்சரவை நியமனங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

03

# ஒன்லைன் பொருள் கொள்வனவின்போது கட்டணத்தை அதிகரிக்கும் நிறுவனங்கள்





அமெரிக்க சுங்க வரிகளை எதிர் கொள்வதற்காக பல நிறுவனங்கள் விலைகளை உயர்த்த உள்ளதாக அறிவித்துள்ள நிலையில், ஒன்லைன் பொருள் கொள்வனவின் போது கட்டண அதிகரிப்பு பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வோல்மார்ட், லெப்லோவஸ் மற்றும் ரால்ப் லாவுரான் போன்ற நிறுவனங்கள், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள வரிகளினால் ஏற்பட்ட செலவுகளை நுகர்வோர்

03



# அமெரிக்க செனேட்டர்கள் குழு பிரதமர் மார்க் கார்னியுடன் சந்திப்பு

அமெரிக்க செனேட்டர்கள் குழு ஒன்று, கனடா பிரதமரான மார்க் கார்னியை சந்தித்துள்ளது.

அந்தக் குழுவில், ஜனநாயகக் கட்சி மற்றும் குடியரசுக் கட்சி ஆகிய அமெரிக்காவின் இரண்டு முக்கிய கட்சிகளைச் சேர்ந்த செனேட்டர்களும் இடம்பெற்றிருந்தனர்.

விடயம் என்னவென்றால், அவர்களும் ட்ரம்பைப் போல கனடாவுடன் மோதல் போக்கைக் கொண்டிருக்கவில்லை என்பது அவர்களுடைய பேச்சில், நடவடிக்கைகளில் தெரியவந்துள்ளது.

சொல்லப்போனால், ட்ரம்பால் பாதிக்கப்பட்டுள்ள இருதரப்பு உறவுகளை சீர்ப்படுத்துவதற்காகவும், வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்வதற்காகவும்தான் அவர்கள் கனடாவுக்கே வந்துள்ளார்கள்.

கனடா பிரதமரான மார்க் கார்னியுடனான சந்திப்பைத் தொடர்ந்து பேசிய, வடக்கு டகோடா செனேட்டரான கெவின் க்ராமர், பிரதமருடனான சந்திப்பு உற்சாகம் ஏற்படுத்துவதாக இருந்ததாகவும், தொடர்ந்து இரு நாடுகளும் இணைந்து முன்னேறத் தூண்டும் வகையில் அந்த சந்திப்பு இருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

அதேபோல, நியூ ஹாம்ப்ஷையர் செனேட்டரான ஜீன் ஷஹீன் கூறும்போது, இந்த சந்திப்பு, சமீபத்திய சில மாதங்களாக இருதரப்பு உறவில் ஏற்பட்ட பிரிவை சரிசெய்யும் வகையில் நேர்மறையான விவாதங்களுடன் தொடரும் என்றும், நாம் இணைந்து முன்னேறுவோம் என்று நாங்கள் நம்புகிறோம் என்றும் கூறியுள்ளார்.

மேலும், அமெரிக்க செனேட்டர்கள் கூறும்போது, இருதரப்புக்கும் இடையிலான பிளவு அமெரிக்கர்களுக்கும் கடினமான ஒன்றாகத்தான் உள்ளது என்றும், குறிப்பாக, கனடாவை ஒட்டி அமைந்துள்ள மாகாணங்களை அது கடுமையாக பாதித்துள்ளது என்றும் கூறியுள்ளார்கள்.

அதை நாங்கள் ஒவ்வொரு நாளும் உணர்ந்தோம் என்று கூறும் மின்னசோட்டா செனேட்டரான ஏமி க்லோபுக்கர், அது கடினமான ஒன்றாக இருந்தது என்பது எங்களுக்குத் தெரியும் என்றும், அதை சீர் செய்வதற்காகவே நாங்கள் கனடாவுக்கு வந்திருக்கிறோம் என்றும் கூறினார்.

மேலும், நாம் இணைந்து செயல்பட்டால், நம் இரண்டு நாடுகளுமே வளர்ச்சியடைய மிகப்பெரிய வாய்ப்புகள் உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆக, கனடாவுடன் மோதல் போக்கைக் கடைப்பிடிப்பது ட்ரம்பும் அவரது ஆதரவாளர்கள் சிலரும்தான் என்பதும், அது அமெரிக்க மக்கள் கருத்தோ, ஆளும் அதிகாரிகளின் கருத்தோ அல்ல என்பதும் தெளிவாகத் தெரியவந்துள்ளது.






# 30 ஆண்டுகளாக காத்திருந்தவருக்கு கிடைத்த 65 மில்லியன் டொலர்

கனடாவின் நியூமார்கெட் நகரத்தைச் சேர்ந்த மார்க் ஹானிலி என்ற நபர், கடந்த மார்ச் 28 அன்று நடைபெற்ற Lotto Max லொத்தர் சீட்டிலுப்பில் 65 மில்லியன் டொலர் ஜேக்பாட் வென்றுள்ளார்.

இந்த பணப்பரிசு வென்ற விடயம் அனைவரினதும் கவனத்தை ஈன்றுள்ளது.

30 ஆண்டுகளாக லாட்டரி சீட்டுகள் வாங்கிய வந்த ஹான்லி, எப்போதும் போல சீட்டில் எண்களை சரிபார்க்கும் போது ஏழு எண்களும் பொருந்தியதை கண்டார்.

பெரிய பரிசு வென்றதனை உணர்ந்து பெரு மகிழ்ச்சி அடைந்ததாகத் தெரிவித்துள்ளார்.

இந்த லொத்தர் சீட்டு வெற்றியானது தனது மனைவி பிள்ளைகளுக்கு பெரு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களாக தாம் லொத்தர் சீட்டு வாங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கனடாவில் மிகவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உள்ள ஹைவே 403 வழித்தடத்தில் அருகில் 200km/h வேகத்தில் வாகனத்தை செலுத்திய இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒன்டாரியோ பொலிஸ் இந்த தகவலை வெளியிட்டுள்ளது. இதில் ஒருவர் மதுபானம் அருந்தி வாகனம் செலுத்தியுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி இவரும் 'ஸ்டண்ட் டிரைவிங்' குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

## ஒன்லைன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீது சுமத்துவதனைத் தவிர வேறு வழியில்லை எனத் தெரிவித்துள்ளன.

அமெரிக்க தொழில்கள் அரைவாசிக்கும் மேற்பட்டவை இதேபோன்ற திட்டங்களை முன்னெடுக்க உள்ளதாக அலியான்ஸ் இன்சூரன்ஸ் நிறுவனம் நடத்திய ஒரு கருத்துக் கணிப்பின்படி தெரியவந்துள்ளது.

"இப்போது நுகர்வோர்களுக்கும் தொழில்களுக்கும் விலை பற்றிய அதிர்ச்சி நிலவி வருகிறது," என வணிக நிபுணர் புருஸ் வின்டர் தெரிவித்துள்ளார்.

தாங்கள் ஒன்லைனில் ஓர்டர் செய்த பொருள்கள் தவிர்ந்தும் சுங்கத் தீர்வைகள் மற்றும் வரிவிதிப்புகள் சேர்க்கப்பட்டதால் அதிர்ச்சியடைந்துள்ளதாக நுகர்வோர் கனடிய பிரதான ஊடகமொன்றிடம் தெரிவித்துள்ளனர்.

ஒரு உதாரணத்தில், 95 டொலருக்கு பட்டியலிடப்பட்டிருந்த துணி ஒரு நுகர்வோருக்கு சென்றடையும் போது 209 டொலராக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

கப்பல் கட்டணங்கள், வரிகள் மற்றும் திரிபுகள் சேர்க்கப் பட்டதால் இவ்வாறு விலை உயர்வடைந்துள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நிறுவனங்கள் பலவிதமாக இந்த சுங்கத்தீர்வைகளை கையாளுகிறார்கள் என்றாலும், பெரும்பாலான நிபுணர்கள், இது நுகர்வோர்களுக்கு கூடுதல் செலவாகவே முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## கரி ஆனந்தசங்கரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மார்க் கார்னி 28 அமைச்சர்களை அமைச்சரவை பதவிகளுக்கும், மேலும் 10 பேரை வெளியுறவுச் செயலாளர்களாகவும் நியமித்துள்ளார்.

அந்தவகையில் பொது பாதுகாப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட ஹரி ஆனந்தசங்கரி முன்னதாக பல அமைச்சரவை அமைச்சுபதவிகளை வகுத்துள்ளார்.

இலங்கைத் தமிழரான ஹரி ஆனந்தசங்கரி கடந்த 2015 ஒக்டோபர் 19 இல் நடைபெற்ற கனேடிய பொதுத் தேர்தலில் லிபரல் கட்சியின் சார்பில் இசுக்கார்பரோ-ரூச் பார்க் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதற்தடவையாக நாடாளுமன்றம் சென்றார்.



முன்னதாக சுதேச உறவுகளுக்கான அமைச்சராகவும் 2025 மார்ச் 14 முதல் நீதி அமைச்சராகவும், கனடிய சட்டமா அதிபராகவும் பணியாற்றி வருகிறார். கனடாவில் தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஏற்படும் வன்முறைகளை தீர்த்து வைக்கும் வகையில், கனடாவில் இளைஞர்கள் சேவை நிலையமொன்றை அவர் ஆரம்பித்துள்ளார்.

மேலும், கனேடிய தமிழ்க் காங்கிரஸ் அமைப்பின் வளர்ச்சிக்காகவும் அவர் முன்னின்று செயற்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.